# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1922 - 2015 ජූලි මස 03 වැනි සිකුරාදා - 2015.07.03

*1922 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1048 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1049 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1050 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 1055 |
| ஏல விற்பனைகள் | 1056 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2015, யூலை மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, யூலை மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

பெறுகை அறிவித்தல்

PROCUREMENT OF 150 M. TONS HARD FOUNDRY COKE TO SRI LANKA RAILWAYS
PROCUREMENT NO. SRS/ F .7246

இலங்கை கொழும்பு , ஒல்கட் மாவத்தை, 355 புகையிரத தலைமையலுவலகம், இலங்கைப் புகையிரத சேவைகள், திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர், இலங்கைப் புகையிரத சேவைகளுக்கு 150 மெ.தொன்கள் HARD FOUNDRY COKE 02 வழங்கும் பெறுகைக்காக உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வார். உற்பத்தியாளர்கள் அவர்களின் விலைமனுக்களை பதிவு மற்றும் தராதர அங்கீகாரம் பெற்ற, அற்றோணித் தத்துவம் வழங்கப்பட்ட முகவரொருவரூடாக அல்லது நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம்.

2. விலை மனுக்கள் 2015. 07.30 ஆந் திகதி இலங்கை நேரம் பி.ப. 2.00 மணிக்கு மூடப்படும்.

3. இலங்கை, கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து அல்லது வெளிநாட்டிலுள்ள இலங்கை தூதுவராலயங்களிலிருந்து 2015.07.29 ஆம் திகதி இலங்கை நேரம் பி. ப. 3 மணி வரை மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான இலங்கைப் பணத்தில் 2,500 ரூபாவை மாத்திரம் அல்லது இலகுவாக மாற்றக் கூடிய நாணயத்தில் சமமான பணத்தொகையை செலுத்துவதன் மூலம் பெறக்கூடிய படிவங்களில் மாத்திரம் விலைமனுக்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

4. விலை மனுக்கள் அவைகளின் மூடும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே இலங்கை, கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள் பொது முகாமையாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும் போது விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும் :

தவிசாளர்,
திணைக்கள பெறுகைக் குழு,
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமையலுவலகம்,
ஒல்கட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

6. விலைமனுஆவணங்கள், இலங்கை, கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை,புயைிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கப்படும்.

7. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும் :-

புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம்,
ஒல்கட் மாவத்தை, கொழும்பு, இலங்கை.

தொலைபேசி இலக்கங்கள்: 94(11) 2438078 அல்லது 94(11)2473328
தொலைநகல்: 94(11) 2432044
மின்னஞ்சல்: srs.slr@ gmail.com
இணையத்தளம்: www.railway. gov.lk

தவிசாளர்,
திணைக்கள பெறுகைக் குழு.

குறிப்பீட்டு இல. SRS/ F.7246

7 - 298

# ஆய விற்பனையும் குத்தகையும்

## இரத்தினபுரி மாவட்டத்தில் 02 ஆம் இலக்க பின்னவளை கள்ளுத்தவறணை விற்பனை - 2016

*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதியிலிருந்து 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள கால எல்லைக்குள் கீழ் அட்டவணையில் காணப்படும் பிரதேசத்தில் கள்ளு சில்லறைக்கு விற்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

இவை கீழுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்-

(i) 1982.08.20 ஆந் திகதியுடைய 207 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணை ஏலவிற்பனையின் படியும்,

(ii) மதுவரிச் சட்ட நிபந்தனையில் காட்டப்பட்டுள்ள எல்லா மதுபான விற்பனை உத்தரவுப்பத்திரம் சம்பந்தமாக பொது நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகவும்.

2. எல்லா விலை மனுக்களுடன் பிரதேச செயலகத்தில் அல்லது இலங்கை வங்கியில் அல்லது மாவட்டச் செயலகத்தில் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் இணைக்க வேண்டும். பின்னவலை இல. 02 கள்ளுத்தவறணைக்காக 1,500 ரூபாவைக் கொண்ட தொகை செலுத்தப்பட வேண்டும்.

3. இலங்கையில் உள்ள எல்லா பிரதேச செயலகங்களிலும் கொழும்பு மதுபான ஆணையாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட படிவத்தில் எழுதப்பட்ட விலைமனு உறையை ஒட்டி முத்திரைக்கு இடப்பக்க மேல் மூலையில் “பின்னவலை இல. 2 கள்ளுத் தவறணைக்கான விலைமனு” என்று தெளிவாகக் குறிப்பிட வேண்டும். கள்ளுத் தவறணை மூடுவதற்கான காலம் முடிவடையும் முன் “பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், இம்புல்பே” எனும் விலாசத்திற்கு அனுப்பவும் அல்லது இம்புல்பே பிரதேச செயலகத்தில் உள்ள விலைமனுப் பெட்டியில் போடவும்.

4. எல்லா விலைமனுக்காரர்களும் தமது சொந்தப் பெயரிலேயே விலைமனு சமர்ப்பிக்க வேண்டும்.

5. ஒருவருக்கு ஒரு கள்ளுத்தவறணைக்கு மேலாக விலைமனு கோரப்பட முடியாது. ஒரு கள்ளுத்தவறணைக்காக 5 பேருக்கும் மேலாக விண்ணப்பம் கோர முடியாது.

6. விலைமனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பணம் இலக்கத்திலும் எழுத்திலும் இருத்தல் வேண்டும். விலைமனுக்காரர் செய்யும் எல்லா விலைமனுக்களிலும் அவரின் கையொப்பமும் திகதியும் இட்டு உறுதிப்படுத்த வேண்டும். எல்லா விலைமனுக்களும் சாட்சியாளர் இருவரினால் கையொப்பமிட்டு உறுதிப்படுத்த வேண்டும். நிபந்தனைகளுக்கு உட்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

7. வெற்றிபெற்ற விலைமனுக்காரர் விலைமனுவை வாங்கியதாகக் கருதப்பட்டு பின் கள்ளுத்தவறணை ஏற்கப்படும். பத்திரத்தில் கையொப்பமிட்டு இம்புல்பே பிரதேச செயலாளர் குறிப்பிடப்படும் பணத்தைப் பிணைப்பணமாக செலுத்தப்பட வேண்டும்.

8. 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை மு. ப. 10.30 மணிவரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும் காலம் முடிவடைந்தவுடன் விலைமனுப் பெட்டி திறக்கப்படும். எல்லா விலைமனுக்காரரும் இங்கு கூறப்பட்ட நேரத்தில் இம்புல்பே பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

9. எந்தவொரு காரணமும் காட்டாது எந்தவொரு விலைமனுவையும் அல்லது விலை மனுக்களையும் சொந்த விருப்பின் பெயரில் நிராகரிக்கும் அதிகாரம் இம்புல்பே பிரதேச செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

10. குறிப்பிட்ட தினத்தில் இந்த கள்ளுத்தவறணை விற்கப்படாவிட்டால் அதன் மீள்விற்பனை 2015.10.29 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும். அன்றைய தினம் விலை மனு சமர்ப்பித்தலானது இந்த விலைமனு வர்த்தமானி அறிவித்தலின்படி குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய ஏற்றுக்கொள்ளப்படும்.

11. 2015 ஆம் ஆண்டிற்காக தற்போது கள்ளுத்தவறணையை நடாத்திக்கொண்டிருக்கும் இடத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதைக் கூற முடியாது. விலைமனுக்காரரால் குறிப்பிட்ட பிரதேசத்தில் கட்டிடம் ஒன்றை (இடம்) தேடிக்கொள்ளலாம். அந்தக் கட்டிடத்திற்காக மதுபான ஆணையாளர் அலுவலகத்தில் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். கட்டிடத்தைப் பெற்றுத்தர உத்தரவுப்பத்திர அதிகாரி உடன்பட மாட்டார் என்பதைக் கவனத்திற்கொள்ளவும்.

12. மேலதிக விபரங்களுக்கு இம்புல்பே பிரதேச செயலகத்திற்கு தொடர்பினை மேற்கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

ஜே. எல். சீ. கே. ஜயசிங்க,
பிரதேச செயலாளர்,
இம்புல்பே.

பிரதேச செயலகம்,
இம்புல்பே,
2015, யூன் 15.

**அட்டவணை**

| கள்ளுத்தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | அமைந்துள்ள பிரதேசம் | திறந்திருக்க வேண்டிய நேரம் | விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும் நேரம், முடியும் நேரம் |
|---|---|---|---|---|
| பின்னவலை கள்ளுத்தவறணை இல. 02 | கடவத்த கோரளை | பின்னவலை நகரம் | மு. ப. 11.00 மணியிலிருந்து பி. ப. 02.00 மணி வரை பி. ப. 05.00 மணியிலிருந்து பி. ப. 08.00 மணிவரை | 2015.09.04 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை |

7-301

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் விதிகளுக்கமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு பற்றி இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : வோடர் வேவ்ஸ் பூல்ஸ் என்ட் ஸ்பாஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 105643
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2015, மே 15
பதிவு செய்யப்பட்ட கம்பனியின் முகவரி : இல. 94, 1 ஆம் மாடி, பாமன்கட வீதி, கொழும்பு 6
செயலாளர் : H.M.E.D.H. கும்புறுலந்த, சட்டத்தரணி

வோடர் வேவ்ஸ் பூல்ஸ் என்ட் ஸ்பாஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

7- 34

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கமைய பின்வரும் கம்பனிகள் பின்வரும் பெயர் மற்றும் அதனுடன் தொடர்புடைய தகவல்களுடன் கம்பனி பதிவாளர் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது :-

கம்பனியின் பெயர் : சவன்னா ரெஸ்டுரன்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 64575
கம்பனி பதிவலுவலகம் : இல. 385/1, நீர்கொழும்பு வீதி, வத்தளை

கம்பனியின் பெயர் : செலோஜன் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 105900
கம்பனி பதிவலுவலகம் : இல. 116, லேயர்ஸ் புரோட்வே, கொழும்பு 14.

கம்பனியின் பெயர் : ஐ. ஈ. ரியல் எஸ்டேட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 101388
கம்பனி பதிவலுவலகம் : இல. 65, டி.எஸ். சேனாநாயக்க வீதி, கொழும்பு 8.

கம்பனியின் பெயர் : கே. பீ. எம். ரெகோட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 105068
கம்பனி பதிவலுவலகம் : இல. 41/28, விஜித வீதி, நெடிமல, தெஹிவளை

கம்பனியின் பெயர் : ஓர்கிட் ரெசிடென்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 104927
கம்பனி பதிவலுவலகம் : இல. 78/1A, பாமன்கடை வீதி , கொழும்பு 6

கம்பனியின் பெயர் : ஹெமரஸ் தெரபியூடிக்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 105810
கம்பனி பதிவலுவலகம் : இல. 116, லேயார்ஸ் புரோட்வே, கொழும்பு 14

கம்பனியின் பெயர் : வெள்ளவத்தை சரணியா ஜுவல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 105453
கம்பனி பதிவலுவலகம் : இல. 429, காலி வீதி, கொழும்பு 6

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோப்பரேட் "டீ" சொளுடியோ
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

7- 76

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

வல்லவ சந்தைக்கருகில் என்ற முகவரியில் வதியும் வில்லப் பிரான்சிஸ்குகே பிரதீப் மாலன் சோவிஸ் ஆகிய நான் 2010. 08.11 ஆம் திகதியன்று பிரசித்த நொத்தாரிசு திருமதி வசந்தா அமரசேகர என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, வல்லவ சந்தைக்கருகில் என்ற முகவரியில் வதியும் வில்லப்பிரான்சிஸ்குகே ரொஷான் சஞ்சீவ சோவிஸ்

என்பவருக்கு வழங்கப்பட்ட 14564 என்ற இலக்கமுடைய அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக் கின்றேன்.

வில்லப் பிரான்சிஸ்குகே பிரதீப் மாலன் சோவிஸ்.

7-59

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கம்பனி பதிவு செய்தல் தொடர்பாக பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ப்ளூனையில் ட்ரெவல்ஸ் அன்ட் டுவர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 105472
பதிவுத் திகதி : 2015, மே 26
பதிவு முகவரி : இல. 121/ 3, கங்காராம வீதி, வேரஹர, பொரலஸ்கமுவ

கம்பனிச் செயலாளர்.

7- 75

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது :-

கம்பனியின் முன்னைய பெயர்: இந்ரா பினேன்ஸ் லிமிட்டெட்
கம்பனி பதிவு இலக்கம் : பீவீ 276
கம்பனியின் பதிவு முகவரி : இல. 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி.
கம்பனியின் புதிய பெயர்: செரன்டிப் பினேன்ஸ் லிமிட்டெட்

ஆர். ஏ. பி. ராஜபக்ஷ,
கம்பனிச் செயலாளர்.

7-79

---

## அற்றோணி அதிகாரத் தத்துவத்தை இரத்துச் செய்தல்

எல்பிட்டிய, நவதகல, டீ. எச். குமாரசிங்க மாவத்தை, இல. 225 என்ற முகவரியில் வசிக்கும் ராஜபக்ஷ குணசேக்கர முதியன்சேலாகே தொன் தினேஷ் ஸம்பத் (தேசிய ஆள்அடையாள அட்டை இல. 792120466) ஆகிய என்னால் பிரசித்த நொத்தாரிசு திரு. நிலந்த ஹால்பன்தெனிய அவர் களால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 1554 மற்றும் 2014.11.16 ஆந் திகதியையுடைய விசேட அற்றோணி அதிகாரப் பத்திரம் மூலம் எல்பிட்டிய, நவதகல, டீ. எச். குமாரசிங்க மாவத்தை, இல. 225, என்ற முகவரியில் வசிக்கும் ராஜபக்ஷ குணசேக்கர முதியன்சேலாகே தொன் உபுல் உதய சாந்த (தேசிய ஆள் அடையாள அட்டை இல. 750902162) என்பவருக்கு வழங்கப்பட்ட எனது அற்றோணி அதிகாரத் தத்துவத்தை இன்று முதல் இரத்துச் செய்து செயழிலக்கச் செய்கின்றேன் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

ராஜபக்ஷ குணசேக்கர முதியன்சேலாகே தொன் தினேஷ் ஸம்பத்.

7- 98

---

## அற்றோணி அதிகாரத் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மற்றும் அதன் பொது மக்கள் அனைவருக்கும் பிங்ஹேன, பாதாகொட, பேருவளையில் வசிக்கும் ரனேபுரகே தினேந்திர சமன் குமார ஆகிய என்னால் பேருவளை, பண்டாரவத்த ஜோசப்குரே மாவத்தை, இலக்கம் 51/ஏ இல் வசிக்கும் பென்னக்குட்டிகே சரத் சில்வா அல்லது பென்னக்குட்டிகே சரத் சில்வா என்பவருக்கு அதிகாரம் வழங்கி பதிவு செய்யப்பட்ட பிரசித்த நொத்தாரிசு அஜிதாஸீ சமரசேகர என்பவரால் எழுதி உறுதிபடுத்தப் பட்ட 3178 ஆம் இலக்க 2015.02.11 ஆம் திகதி கொண்ட அற்றோணி அதிகாரத்தை இத்துடன் இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக அறியத்தருகின்றேன்.

ரனேபுரகே தினேந்திர சமன் குமார.

7-99

---

## அற்றோணி அதிகாரத் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பஸ்யால, கண்டி வீதி, இலக்கம் 31/1, இல் வசிக்கும் தெதுரு ஆரச்சிகே அயிரிஸ் பியஸீலி (தே.ஆ.அ.அ.இல. 337330991V) ஆகிய நான் பிரசித்த நொத்தாரிசு மல்லஹெ விதானகே பிரசாத் நிரன்ஜன் என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 5307 மற்றும் 2010. 04. 19 ஆம் தினத்தின் அற்றோணி அதிகாரப் பத்திரத்தின் மூலம் ருக்கஹவில, வல்பொல இலக்கம் 95சீ என்ற முகவரியில் வசிக்கின்ற லெனகல விதானலாகே நிமல் ரத்னசிறி (தே.ஆ.அ.அ.இல. 740814362V) என்பவருக்கு கொடுக்கப்பட்ட அற்றோணி அதிகாரத் தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்படுவதோடு அவ்வதிகாரத்தின் மீது செய்கின்ற எவ்வித செயற்பாடுகளும் இதன்பின் செல்லுபடியற்றது என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களும் அறிந்து கொள்வற்காக இவ்வறிவித்தல் விடுக்கின்றேன்.

தெகுரு ஆரச்சிகே அயிரிஸ் பியசீலி.

7- 103

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கின்றேன் :-

கம்பனியின் பெயர்: குளோபல் அட்வான்ஸ் ரிசைலிங் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்

பதிவிலக்கம்: பீவீ 80657
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2011. 08.15
பதிவு முகவரி : இல. 500/94, திம்பிரிகஸ்யாய வீதி, கொழும்பு 5

எப். ஜே. சி. இலியாஸ்,
கம்பனிச் செயலாளர்.

இல. 500/94, திம்பிரிகஸ்யாய வீதி,
கொழும்பு 5.

7- 114

---

## பொது அறிவித்தல்

2008 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவுக்கிணங்க பின்வரும் கம்பனியானது தனது பெயரை மாற்றியுள்ளது என 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

நிறுவனத்தின் முன்னைய பெயர் : ஒமேகா இன்ஜினியரிங் அன்ட் எஸ்.எஸ் பெப்ரிகேடர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
நிறுவனத்தின் பதிவு இலக்கம்: பீவீ 7899
முகவரி: இல. 53/D, கொஸ்ஹின்னவத்த ரோட், 10 ஆம் மைல்கல், கட்டுவவல, பொரலெஸ்கமுவ
நிறுவனத்தின் புதிய பெயர்: ஒமேகா இன்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட்

ஒமேகா இன்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

7- 136

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இம்புல்கொட, பஹல இம்புல்கொட, இல. 122/B இல் வதியும் லியனவடுகே நெல்சன் இந்தரரத்ன (தே.ஆ.அ.இல. 631052045 V) ஆகிய என்னால் 1998.06.04 ஆம் திகதி இத்தாலி ரோமில் அமைந்துள்ள இலங்கை தூதர் அலுவலகத்தில் சமாதான நீதவான் திரு. ஏ. டபிள்யூ. பி. பதிராஜாவினால் உறுதிப்படுத்தப்பட்ட அற்றோணித்தத்துவத்தின் மூலம் வேபொட, வேபொட வடக்கு, இலக்கம் 602 இல் வதியும் லியனவடுகே திஸ்ஸ விக்கிரமரத்ன என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த அற்றோணித் தத்துவத்தை 2015.03.17 ஆம் திகதி தொடக்கம் இரத்துச் செய்து செயல் வலுவற்றதாக்கப்பட்டுள்ள தெனவும் அந்தத் திகதியின் பின்னர் லியனவடுகே திஸ்ஸ விக்கிரமரத்னவினால் எனது சார்பாக செய்யப்படும் எந்தவொரு செயற்பாடு அல்லது கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக நான் வகை கூற மாட்டேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத் தருகின்றேன்.

லியனவடுகே நெல்சன் இந்திரரத்ன

7-116

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி 2015.05.21 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர்: ரீடெயில் ஜீனியஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி பதிவு இல. பீவீ 105776
பதிவு முகவரி: இல. 26A, ஜாயா வீதி, கொழும்பு 4.

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

7-120

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனி பின்வருமாறு கூட்டிணைக்கப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர்: டீ பீ ஜீ மெனேஜ்மன்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவிலக்கம்: பீவீ 106141
கூட்டிணைப்பு திகதி: 2015, யூன் 08
கம்பனி பதிவு முகவரி: 33ஆவது மாடி, உலக சந்தை நிலையம், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1.

7- 134

---

## பொது அறிவித்தல்

பின்வரும் கம்பனியானது கூட்டிணைக்கப்பட்டுள்ளதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர்: ஒரிஜின் புரொடக்ஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இல: பீவீ 105492
பதிவு முகவரி: இல. 89/ஏ, மெத வெலிக்கட வீதி, இராஜகிரிய.
கூட்டிணைப்புத் திகதி : 2015, மே 8.

கம்பனிச் செயலாளர்.

7- 161

## பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியை கூட்டிணைப்பதற்கான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர்: டீ பிரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இல: பீவீ 105706
பதிவு அலுவலகம் : இல. 10,ஞானார்த்த பிரதீப்ப மாவத்தை, கொழும்பு-8.

சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்கள்.

7- 163

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் சஹன் ஹோம்ஸ் அன்ட் பொரப்பட்டி டிவலபர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் வ/ப பொறுப்புள்ள ( தனியார்) கம்பனியாக 2015 , சனவரி மாதம் 23 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-

கம்பனியின் பெயர்: சஹன் ஹோம்ஸ் அன்ட் பொரப்பட்டி டிவலபர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இல: பீவீ 103461
பதிவு முகவரி: இல. 278/2, ஹன்சகிரி வீதி, கம்பஹா.

பணியாளர்கள் சபையின் கட்டளைப்படி.

7- 164

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

களனி, கோனவள, இல. 216/1, என்ற இடத்தில் வதியும் தொன் வோல்டர் பொத்மிட்டியகே) 162128182V என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையின் உரிமையாளர்) ஆகிய என்னால் கொழும்பு பிரசித்த நொத்தாரிஸ் சி. என். எவ். த சில்வா என்பவரால் மாக்கோளையில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1078 என்ற இலக்கமும் 2012.11.27 ஆம் திகதியிமுடையதுமான அற்றோணித் தத்துவத்தின் மூலம் களனி கோனவள (மே./பா.) இல.216/1 என்ற இடத்தில் வதியும் ஹபரகமுகே அஜித் நாலக்க பீரிஸ் (618183582V என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையின் உரிமையாளர்) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இரத்து செய்யப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

தொன் வோல்டர் பொத்மிட்டியகே.

7-176

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 7, சேர்ச் ரோட், மட்டக்குளி, கொழும்பு 15, ஐச் சேர்ந்த முஹம்மட் புஹாரி முஹம்மட் ரில்வான் ஆகிய நான், இல. 50/5, வெலிகடமுல்ல வீதி, மாபோல, வத்தளையைச் சேர்ந்த முஹம்மட் அபூபக்கர் முஹம்மட் இப்ராஹிம் என்பவருக்கு கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஐயாத்துரை ராஜசிங்கம் என்பவரினால் இல. 2330 ஆம் இலக்கத்தில் 2004.09.03 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட பொது அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்து செய்கின்றேன் என்றும் இன்றிலிருந்து குறித்த தத்துவக்காரரினால் என் சார்பில் செய்யப்படும் எந்த செயலுக்கும் நான் பொறுப்பெடுக்க மாட்டேன் என்றும் அத்தகைய செயல்கள் எதனையும் நான் ஏற்றங்கீகரிக்க மாட்டேன் என்றும் இத்தால் பொது மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

முஹம்மட் புஹாரி முஹம்மட் ரில்வான்.

7- 177

---

## பொறுப்பு வரையறுத்த கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்: ட்ரெக்டிவ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இல: பீவீ 105760 திகதி : 2015.05.21
கம்பனின் பதிவு முகவரி : இல. 62, 2 ஆம் ஒழுங்கை, இரத்மலானை.

பிஸ்னஸ்மேட்(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 45, பிறேபுறூக் ஸ்ரீட்,
கொழும்பு 2.
2015, மே 25.

7- 185

---

## கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8(2) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி 2015.05.06 ஆந் திகதி முதல் பெயர் மாற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பழைய பெயர் : மனேஜ்மட் போர் டெவலொப்மென்ட் பௌன்டேசன் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இல. : பீவீ 14693

கம்பனியின் பதிவு முகவரி : இல. 523, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு -08.
கம்பனியின் புதிய பெயர் : எம். டி. எவ். செனத் ஏசியா (பிறைவேட்) லிமிட்டெட்

பிஸ்னஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 45, பிறேபுறூக் ஸ்ரீட்,
கொழும்பு 2.
2015, மே 27.

7- 186

---

## பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர்: வெபிட்ப்ரோ (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 105670 திகதி : 2015.05.26
கம்பனின் பதிவு முகவரி : இல. 85 1/1, வோட் பிளேஸ், கொழும்பு 7

பிஸ்னஸ்மேட்(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 45, பிறேபுறூக் ஸ்ரீட்,
கொழும்பு 2,
2015, யூன் 4.

7- 187

---

## பொறுப்பு வரையறுத்த கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர்: ட்ரவல் 1024 (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இல: பீவீ 105955 திகதி : 2015.05.29
கம்பனின் பதிவு முகவரி : இல. 85 1/ 1, வோட் பிளேஸ், கொழும்பு 7

பிஸ்னஸ்மேட்(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 45, பிறேபுறூக் ஸ்ரீட்,
கொழும்பு 2,
2015, யூன் 4.

7- 188

## கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர்: ஐடெக்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இல: பீவீ 105998 திகதி : 2015.06.01
கம்பனின் பதிவு முகவரி : இல. 171/25, வண. சரணபால மாவத்தை, பொரளை.

பிஸ்னஸ்மேட்(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 45, பிறேபுறூக் ஸ்ரீட்,
கொழும்பு 2,
2015, யூன் 9.

7- 189

---

## எல்பி பினான்ஸ் பீஎல்சீ

(கம்பனி பதிவிலக்கம் பிகிவ்156)

கம்பனியின் பங்கு இடாப்பு 2015, யூலை 9 ஆம் திகதி வியாழக் கிழமையிலிருந்து 2015, யூலை13 ஆம் திகதி திங்கட்கிழமை வரை (இரண்டு நாட்கள் அடங்கலாக) மூடப்பட்டிருக்குமென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 127 ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது :-

எல்பி பினான்ஸ் பீஎல்சீ இன்
பணிப்பாளர் சபையின் கட்டளையின் பிரகாரம்,

பி டபிள்யூ கோப்பறேட் செக்ரட்டேரியல்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 275/75,
பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை,
கொழும்பு 7.
2015, யூன் 15.

7-266

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

குருநாகல், புத்தளம் பாதை, இலக்கம் 168/4, என்ற முகவரியில் வசிக்கும் அடையாள அட்டை இலக்கம் 582492301 x உரியவராகிய ஹபீப் மொஹமட் மொஹமட் அமீர் தற்போது அமெரிக்கா நாட்டில் New Rochelle Care Center31, Lock woodAvenue New Rochelle N.Y.10801-5056 என்ற முகவரியில் வசிக்கும் நான், குருநாகல் புத்தளம் பாதை, இலக்கம் 168/4, என்ற முகவரியில் வசிக்கும் தேசே குன்னான்சேலாகே கெதர ஹபீப் மொஹமட் மொஹமட் துசான் என்பவருக்கு வழங்கப்பட்டிருக்கும் நியுயோர்க் நகரில் வசிக்கும் பிரசித்த நொத்தாரிசு

றொனல்ட் வீ. செய்மா என்பவரால் 2001.01.04 ஆம் திகதி உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இன்று முதல் இரத்து செய்யப்பட்டு அதனை செல்லுபடியாகாதபடி செயலிழக்கச் செய்துள்ளேன் என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத் தருகின்றேன்.

ஹபீப் மொஹமட் மொஹமட் அமீர்.

7-267

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர்: ஆயுத நாவீ (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இல: பீவீ 106337
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2015.06.16
பதிவு அலுவலகம் : இல. 64, ஸ்கூல் அவனியு, ஒவ் ஸ்டேசன் வீதி, தெஹிவளை

பினான்சியல் அன்ட் பிசினெஸ் அசோசியேட்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்,

7- 277

### கம்பனி ஒன்றை கூட்டிணைப்பது சம்பந்தமான பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கமுடைய நிறுவன யாப்பின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் கீழே குறிப்பிடப்படும் நிறுவனம் கூட்டிணைக்கப் பட்டுள்ளது பற்றி இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

நிறுவனத்தின் பெயர்: வரையறுக்கப்பட்ட மேன்குறோவ் லகூன் (தனியார்)
பதிவு இல: பீவீ 106039
கூட்டிணைப்புத் திகதி : 2015.06.05
பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 20/06 1/1, கட்டுவாவள வீதி, மஹரகம.

7- 288

### பொதுஅறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர்: எஸ் ஒடோ மார்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இல: பீவீ 106038
பதிவு செய்த திகதி : 2015.06.03
பதிவு செய்த முகவரி : இல. 62/5, வட்டாரத்தென்ன பெசேஜ், கண்டி.

7-294

## அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள்

### சிலாபம் பிரதேச செயலகப் பிரிவில் அந்நிய மதுபானத் தவறணை குத்தகை விற்பனை - 2016

2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அந்நிய மதுபானத் தவறணைகளுக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைவாகவே கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்பட வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடது பக்கத்தில் தவறணையின் பெயரும், இலக்கமும் பின்வருமாறு -

"........................................... இலக்கம் கொண்ட ........................................... அந்நிய மதுபானத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிட்டு 2015.08.25 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு முன் சிலாபம் பிரதேச செயலகத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் அதனை இடுதல் வேண்டும். அல்லது பதிவுத்தபாலில் மேற்குறிப்பிட்ட நேரம், திகதிக்கு முன் பிரதேச செயலகத்திற்கு கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அந்நிய மதுபான தவறணை குத்தகை நிபந்தனைகளுக்கமைவாக அமைய வேண்டும்.

5. 2015.08.25 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனேயே சகல கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அச்சந்தர்ப்பத்தில் சகல கேள்விப்பத்திரதாரர்களும் சிலாபம் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. இவ்வர்த்தமானியின் நிபந்தனைகளுக்கமைய இதுவரை குத்தகை விற்பனை செய்யப்படாமல் ஏதாவது தவறணை இருப்பின் அவை 2015.09.04 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீள் விற்பனைக்கு விடப்படும்.

7. இது தொடர்பாக மேலதிக விபரங்கள் சிலாபம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 032-2223205)

**அட்டவணை**

| பகுதி | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்கும் நேரமும் திகதியும் | மீள்விற்பனை செய்யும் நேரமும் திகதியும் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| சிலாபம் | இல. 7, பிடிபன தெரு, சிலாபம் | 2015.08.25 மு. ப. 10.30 | 2015.09.04 மு. ப. 10.30 | மு. ப. 11.00 பி. ப. 05.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 1,500 |
| சிலாபம் | இல. 6, பிடிபன தெரு, சிலாபம் | 2015.08.25 மு. ப. 10.30 | 2015.09.04 மு. ப. 10.30 | மு. ப. 11.00 பி. ப. 05.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 1,500 |

ரங்கன பிரனாந்து,
பிரதேச செயலாளர்,
சிலாபம்.

பிரதேச செயலகம்,
சிலாபம்,
2015, யூன் 17.

7-178

# ஏல விற்பனைகள்

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (கட்டுபெத்த கிளை) மூலம் பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கொமர்சியல் பேங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. (பதிவு இலக்கம் PQ 116 ) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி இதன்கீழ் விபரிக்கப்பட்ட காணி என்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**அட்டவணை**

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், கட்டுநாயக்க சீதுவ நகர சபை எல்லையில் பண்டாரவத்தை கிராமத்தில் அமைந்துள்ள கொரக்காவத்த காணிக்கு நிலஅளவையாளர் பி. டி.என். பீரிஸ் 02. 06. 2007 ஆம் திகதிய வரைபடம் இலக்கம் 3182A இல் காட்டப்பட்ட லொட் 1, இக்காணியின் விஸ்தீரணம் இருபத்தைந்து தசம் ஏழு பேர்ச்சு (0ஏ.0றூ.25.7பே.). அங்குள்ள கட்டிடங்கள் அதனகத்தே யுள்ள அனைத்தும்.**

(கடன் எடுத்த பள்ளியவத்தகே ரஞ்சித பெரேரா மேற்படி ஆதனத்தை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைத்துள்ளார்.)

மேற்படி சொல்லப்பட்ட காணி என்னால் 2015, யூலை 27 ஆம் திகதி காலை 11.15 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக**.- 2015.03.13ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், ''லக்பிம'', ''த ஐலன்ட்'' மற்றும் ''வீரகேசரி'' பத்திரிகைகளையும் ஏல விற்பனை அறிவித்தலுக்காக 2015.07.03 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 2015.07.06 ஆந் திகதியிட்ட அரசாங்க வர்த்தமானியையும் ''லக்பிம'', ''த ஐலன்ட்'', ''வீரகேசரி'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்குச் செல்லும் விதம்**.- இக்காணியை அடைய கொழும்பு நகரத்திலிருந்து நீர்கொழும்பு பிரதான வீதியில் 25 கி. மீற்றர் மற்றும் 500 மீற்றர் சென்று சீதுவை சந்தியை அடைய முன் முனிதாச குமாரதுங்க மாவத்தையை காண முடியும். வலது பக்கம் இக்காணியில் 200 மீற்றர் சென்று இக்காணியை அடைய முடியும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து சதவீதம் (10%) ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 01% ;
(3) ஏலதாரரின் தரகு பணம் 2.5% ;
(4) நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;
(6) ஏலத்திற்காக செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) வெட் வரி.

மிகுதி 90% ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பி. எல்.சி. பிரதான அலுவலகம் அல்லது கட்டுபெத்தை கிளையில் செலுத்த வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு.- முகாமையாளர், கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 162இ, சொய்சாபுர, இராவத்தாவத்த, மொறட்டுவ. தொலைபேசி இல. : 011-2626970.

எல். பி. சேனாநாயக்க,
சமாதான நீதவான்,
சிரேட்ட உத்தரவுபெற்ற ஏலதாரரர்,
விலை மதிப்பீட்டாளர்கள் மற்றும்
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200, 2ஆம் மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12,
தொலைபேசி /தொலைநகல் இல. : 011 2445393.
மின்னஞ்சல் : senaservice@ sltnet.lk

7-166

---

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (கட்டுபெத்த கிளை) மூலம் பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. (பதிவு இலக்கம் PQ 116 ) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி இதன்கீழ் விபரிக்கப்பட்ட காணி என்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

### அட்டவணை

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம் கட்டுநாயக்க சீதுவ நகர சபை எல்லையில் பண்டாரவத்தை கிராமத்தில் கிராம அலுவலர்பிரிவு 145 முகுலன்கமுவ பண்டார வத்த கட்டான பிரதேச செயலாளர் பிரிவு ஆகியவற்றில் அமைந்துள்ள வரிப்பண இல. 68, முனிதாச குமாரதுங்க மாவத்த என்னும் கொரக்காவத்த காணிக்கு நிலஅளவையாளர் பி. டி.என். பீரிஸ் 02.06.2007 ஆம் திகதிய வரைபடம் இலக்கம் 3182 A இல் காட்டப்பட்ட லொட் 1, இக்காணியின் விஸ்தீரணம் இருபத்தைந்து தசம் ஏழு பேர்ச்சு (0ஏ.0றூ.25.7பே.). அங்குள்ள கட்டிடங்கள் அதனகத்தேயுள்ள அனைத்தும்.**

(கடன் எடுத்த சீதுவை, சீதுவ தெற்கு இல. 222/2 என்ற பதிவு விலாசத்தில் அமைந்துள்ள இலங்கை கம்பனிச் சட்டப்படி அமைக்கப்பட்ட ரண்திலின (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் காணியை ஈடுவைத்த பள்ளியவத்தகே ரஞ்சித பெரேரா மேற்படி ஆதனத்தை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைத்துள்ளார்.)

மேற்படி சொல்லப்பட்ட காணி என்னால் 2015, யூலை 27 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2015.03.06 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 09.03.2015 ஆந் திகதியுடைய "லக்பிம", "த ஐலன்ட்" மற்றும் "வீரகேசரி" பத்திரிகைகளையும் ஏல விற்பனை அறிவித்தலுக்காக 2015.07.03 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் "லக்பிம", "த ஐலன்ட்", "வீரகேசரி" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்குச் செல்லும் விதம்.**- இக்காணிக்கு செல்வதற்கு கொழும்பு நகரத்திலிருந்து நீர்கொழும்பு பிரதான வீதியில் 25 கி. மீற்றர் மற்றும் 500 மீற்றர் சென்று சீதுவை சந்தியை அடைய முன் முனிதாச குமாரதுங்க மாவத்தையை காண முடியும். வலது பக்கம் இக்காணியில் 200 மீற்றர் சென்று இக்காணியை அடைய முடியும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து சதவீதம் (10%) ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 01% ;
(3) ஏலதாரரின் தரகு பணம் 2.5% ;
(4) நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;
(6) ஏலத்திற்காக செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) வெட் வரி.

மிகுதி 90% ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பி. எல்.சி. பிரதான அலுவலகம் அல்லது கட்டுபெத்த கிளையில் செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்கு.- முகாமையாளர், கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 162இ, சொய்சாபுர, இராவத்தாவத்த, மொறட்டுவ. தொலைபேசி இல. : 011-2626970.

எல். பி. சேனாநாயக்க,
சமாதான நீதவான்,
சிரேட்ட உத்தரவுபெற்ற ஏலதாரரர்,
விலை மதிப்பீட்டாளர்கள் மற்றும்
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200, 2ஆம் மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12,
தொலைபேசி /தொலைநகல் இல. : 011 2445393.
மின்னஞ்சல் : senaservice@ sltnet.lk

7-167

---

## சம்பத் வங்கி பீ எல் சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

### சொத்துக்கள், நிலமனை ஏலவிற்பனை

பீ. ஏ. பீ. கருணாரத்ன - கணக்கு இல. 0005 5005 0382

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2007.12.27 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2010.10.29 ஆந் திகதிய இலங்கைச்

சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும் 2010.10.19 ஆந் திகதிய "திவயின", "ஜலன்ட்", "தினக்குரல்" தினசரி பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான, முப்பத்தொரு இலட்சத்து எழுபத்து மூவாயிரத்து நானூற்றிருபத்துமூன்று ரூபா பத்து சதம் (ரூ. 31,73,423.10) 2007, செத்தெம்பர் 19 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தி தீர்க்கும் திகதி வரை இருபத்தொன்பது இலட்சத்து அறுபதாயிரத்து நானூற்றைம்பத்துநான்கு ரூபா அறுபத்தொரு சதம் (ரூ. 29,60,454.61) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினான்கு வீதம் (14%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான பீ. கே. ஈ. சேனாபதி என்பவர் மூலமாக 2015.07.24 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறியத் தருகின்றோம்.

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் அளுத்குரு கோரளேயின் ராகம் பத்துவின் ஜா-எல பிரதேச சபை எல்லைகளுக்குள் கந்தான உப அலுவலக எல்லைக்குள் நாகொட கிராமத்தில் அமைந்த "மில்ல காஹாவத்த, பின்வத்த எனும் கதுருகாஹாவத்த மற்றும் பின்வத்த எனும் கதுருகாஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டீ. ஜே. வீ. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1981, யூன் 6 ஆந் திகதியிடப்பட்ட இல. 6029 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட காணியின் ஒரு பகுதியின் உப பிரிவு) உத்தரவுபெற்ற நிலஅளவையாளரான ரீ. ஏ. டீ. ஏ. சேனாநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2001, ஒற்றோபர், 16 ஆந் திகதியிடப்பட்ட 2250 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட, காணித்துண்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன-வடக்கு : ரனே என்பவரின் காணி ; கிழக்கு : அதே காணியின் எஞ்சிய பகுதி ; தெற்கு : லொட் 2 (13 அடி அகல வீதிக்கான ஒதுக்கம்) மற்றும் மேற்கு : எஸ். மொஹொமட் இற்குச் சொந்தமான காணி ஆகிய இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஏழு தசம் ஆறு பேர்ச் (0ஏ. 0றூ. 7.6பே.) அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் மற்றும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்து முடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசா தங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் அதனுடன் தொடர்புடைய கிளைகளுடன் கூறப்பட்ட 2250 ஆம் இலக்க வரைபடத் திற்கு அமைவாக கம்பஹா காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் பி482/31 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

வழி மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மற்றும் மார்க்க உரிமைகளுடனானது.

லொட் 2 (வீதிக்கான ஒதுக்கம்) கூறப்பட்ட 2250 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவாக கம்பஹா காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் பி 482/32 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மற்றும் 3480 ஆம் இலக்க வரைபடத்தின் வழி மீது பிரவேசிக்கும் மற்றும் மார்க்க உரிமையுடன் கூடியது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

குரூப் கம்பனிச் செயலாளர்.

7-257

---

**ஹட்டன் நஷனல் வங்கி ப.வ.க. – வென்னப்புவை கிளை**

(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு (வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், பிட்டிகல் கோறளை தெற்கு, கம்மல்பற்று, வென்னப்புவை பிரதேச சபையின் நின்னதம கம்மல்பற்று உப அலுவலக நிர்வாக எல்லைக்குள் தும்மல்தெனி மேற்கில் அமைந்துள்ளதும் "மதனகஹவத்தை, சியம்பலகஹவத்தை மற்றும் தெப்பே ஓவிட்ட அத்துடன் மதனகஹவத்தை மற்றும் தெப்பே வத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யு. லக்ஷ்மன் எச். பெர்னாண்டோ அவர்களால் தயாரிக்கப் பட்டு 2006, மே 16 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 6884 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 2 என அடையாள மிடப்பட்டதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 20பே.)**

(கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஜீ. எம். எம். பெர்ணான்டோ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2007, மே 10 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 1974 மற்றும் 2006, செத்தெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 1694 ஆகிய இரண்டின் மீது ஈடுவைக்கப்பட்டு அடைமானம் வைக்கப்பட்டு, வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ள கடப்பாடுடையவரான வர்ணகுலசூரிய தம்மனகே திலக் நலக்க மதுவன்த பெர்ணான்டோவிற்கு அளிக்கப்பட்ட கடன் வசதி களுக்காக ஹட்டன் நஷனல் வங்கி ப.வ.க. இற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள ஆதனம்)

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- வென்னப்புவை நகர் மத்தியிலிருந்து கொழும்பு-புத்தளம் வீதி வழியே கொழும்பு நோக்கி ஏறக்குறைய 2.4 கிலோ மீற்றர் (44 கிலோ மீற்றர் கல்லிலிருந்து தொடர்ந்து 30 மீற்றர்) சென்று, 12 அடி அகல வீதி ஒதுக்குக்கு வலதுபக்கம் திரும்பி வீதியின் வலதுபக்கத்திலுள்ள ஆதனத்தை அடைவதற்கு 135 மீற்றர் தூரம் செல்லவும்.

மேலே விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை 2015, யூலை 30 ஆந் திகதி வியாழக்கிழமை மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நாம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வோம்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2012, நவெம்பர் 9 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2013, மே 17 ஆந் திகதிய "லக்பிம", "தினகரன்" மற்றும் "டெயிலி மிரர்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் அதிகார சபை வரி 1% (ஒரு வீதம்) ;

(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் மீது 2 1/ 2% (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 500 ரூபா ;
(5) விற்பனைச் செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனும் இருப்பின்) ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய இலங்கை அரசினால் அல்லது வேறேதேனும் அதிகார சபையினால் அமுலாக்கப்பட்டு எப்போதும் ஏற்புடைத்தான கட்டணங்கள், வரிகள், வரிக்கட்டணங்கள் அல்லது வேறேதேனும் வரிகள் ஆகியவற்றுடன் சேர்த்து கொள்வனவு விலையின் மிகுதி 90%.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங் களையும் "கொழும்பு 10, ரீ. பி. ஜயா மாவத்தை, இல. 479, ஹற்றன் நஷனல் வங்கி ப. வ. க., உதவிப் பொது முகாமையாளர்-அறவீடுகள்" அவர்களிடம் பார்வையிட முடியும். தொலைபேசி இல. : 011-2661816 ; தொலைநகல் இல. 011-2661835.

டல்லாஸ் கெலார்ட்ஸ்,
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 146/3, கல்தேரா கார்டின்ஸ்,
துட்டுகெமுனு தெருவிற்கப்பால்,
கொஹுவளை.
தொலைபேசி இல. : 011-4302622, 011-4302623, 011- 2856013.

7-269

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2015***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | வெள்ளி | 03.07.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.06.2015 |
| | | வெள்ளி | 10.07.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.06.2015 |
| | | வெள்ளி | 17.07.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.07.2015 |
| | | வெள்ளி | 24.07.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.07.2015 |
| | | வியாழன் | 30.07.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.07.2015 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 07.08.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.07.2015 |
| | | வெள்ளி | 14.08.2015 | .. | நண்பகல் 12 | வியாழன் | 30.07.2015 |
| | | வெள்ளி | 21.08.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.08.2015 |
| | | வெள்ளி | 28.08.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.08.2015 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 04.09.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.08.2015 |
| | | வெள்ளி | 11.09.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.08.2015 |
| | | வெள்ளி | 18.09.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.09.2015 |
| | | வெள்ளி | 25.09.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.09.2015 |

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேகா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.